

கண்ணன் கழலடிக்கு ஒரு

# கவிதைக் கொத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. [illegible]

No 20 St. Peters lane
Jaffna.
11/10/92.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ நமோ நாராயணா

# கண்ணன் கழலடிக்கு ஒரு
# கவிதைக் கொத்து

★


ஆக்கியோன்:

திரு. வல்லிபுரம் மகாலிங்கம்

B. A. (Cey.), L. L. B. (Cey.)

சட்டத்தரணி,

முன்னாள் உபஅதிபர்,

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.


★


அச்சுப்பதிவு:

தமிழ்ப்பூங்கா அச்சகம்

நெல்லியடி – கரவெட்டி

1989.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**கண்ணன்** கழலடிக்கு ஒரு கவிதைக் கொத்தைச் சமர்ப்பிக்கவேண்டுமென்ற எனது நீண்ட காலப் பேரவா, இன்றைய அமைதியற்ற சூழ்நிலையில் நிறைவேறுகிறது.

தமிழ் இலக்கிய, இலக்கணங்களுள் நீந்தித் தவழ்பவர்கள், மத, ஆன்மீகத் துறைகளில் பாண்டித் தியம் பெற்றவர்கள் மட்டுமே துணிந்து மேற்கொள் ளும் ஒரு பணியை, நான் துணிந்தமைக்குக் கண் ணன் அருளே காரணமாகும்.

இச்சிறு நூலுக்கு அணிந்துரை வழங்கிய திரு. சிவராஜசிங்கம் அவர்களுக்கும் என்றும் கடப் பாடுடையேன்.

மேலும், கைப்பிரதியைப் பார்வையிட்டு வேண்டிய திருத்தம் செய்து, அரிய ஆலோசனைகளை வழங்கிய கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. *R.* சுவாமிநாதசர்மாவுக்கு எனது ஆழ்ந்த நன்றி என்றென்றும் உண்டு.

இறுதியாக, கைமாறு கருதாது, கையெழுத்துப் பிரதியாக இருந்த கவிதைத் தொகுப்பை, தட்டச்சுப் பிரதியாக்கிய கரவெட்டி திரு. கே. கணேசமூர்த்திக்கும் அச்சேற்றுகையில் எழுத்துப்பிழைகளைப் பார்வை யிட்டு திருத்தியுதவிய எனது உற்ற நண்பரும் ஆசி ரியருமான திரு. *K.* சிதம்பரப்பிள்ளைக்கும் எனது நன்றி உரித்தாகுக.

நெல்லியடி,
கரவெட்டி, 14-1-89

**வ. மகாலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**"மாயவன் பின்சென்ற மனம்"**

வாசத் துளவணியும் மாயன் மலரடிக்கு
நேசமலர்ப் பாமாலை நேர்ந்தணிந்தான்—தேசுடைய
செந்தமிழும் ஆங்கிலமும் தேர்ந்த மகாலிங்கப் பேர்
சந்தமுறு கண்ணதா சன்.

திருமால் தீவிரமான தமிழ்ப் பற்றுடைய தெய்வம். கணிகண்ணன் என்ற கவிஞன் ஊரைவிட்டுச் சென்றுவிட்டான் என்பதைக் கேள்வியுற்று, அவனில்லாத ஊரில் தனக்கு அலுவல் இல்லை என்று தன்னைந் நாகப்பாய் சுருட்டிக் கொண்டு கணிகண்ணன் பின்னே மணிவண்ணன் சென்றான் என்பது இலக்கியம் கூறும் செய்தி. *பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டல்* எனக் குமரகுருபரர் திருமாலின் செந்தமிழ் வேட்கையைச் சிறப்பித்துப் பேசுவர்.

"பாட்டுக்கும் முத்தமிழ் வில்லிபுத்தூர் வரும் பாவைகுழற் சூட்டுக்கும்" உருகுபவர் பரந்தாமர். இவ்வாறு உருகும் "பலவீனத்தை" உணர்ந்து வேட்டுருகும் தமிழ்க்காதல் வித்தகராகிய வ. மகாலிங்கம் அவர்கள் அவனருளை இலகுவிற் பெறவேண்டி;

*பணிந்தேன் திருமாலைப் பாமாலை தாளில்*
*அணிந்தேன் அருள் தஞ்சமாகத்-துணிந்தேன்.*

என அழகிய மணவாள தாசர் கூறிய பாங்கில் "மாயவன் மலரடிக்கு" என்ற மகுடத்தில் நூறு கவிமலர் கொண்டு ஓர் பாமாலை புனைந்து போற்றியுள்ளார்.

வாரந்தோறும் வல்லிபுரக்கோயில் சென்று மணிவண்ணனை வணங்கிப் பயின்ற திறத்தாலே மாயவன் பின் சென்று விட்டது அவர் மனம். மரகத வாவியிடையே வனசம் மலர்ந்தாலன்ன மாயனது வடிவழகிலும் அவனது அருள் நோக்கமைந்த-லீலைகளிலும் படிந்தெழுந்த அவர் தம் மனமாகிய வண்டு நீலவண்ணக் கண்ணனது லீலா விநோதச் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நறவைத்திரட்டி வந்து அவரது கவித்துவமாகிய தேன் கூட்டில் சேர்த்து வைத்ததாக, அவரது பக்திப் பெருக்கெனும் தென்றல் வீச்சால் கவித்துவ முகை இதழ் விண்டு தேன் சொரிவதாயிற்று. இத்தேன் துளிகளின் கூட்டரவே 'மாயவன் மலரடிக்கு' எனும் கவிதைத் தொகுப்பு.

கவிஞர் மாகலிங்கத்தின் கவிதை மரபு நெறி இயன்றது. மரபுக் கவிதையென்றால் கடின நடை பயின்றது, பொருள் புலப்படாதது எனக்கருதுவாரும் உளர். யாருக்கு வேண்டும் மரபுக் கவிதை? என வினவப்படும் இந்நாளில் கவி மரபு பிறழாது எத்திறத் தாரும் இனிது விளங்கிக்கொள்ளும் பழகு தமிழில் பாடல்களைப் புனைந்திருப்பது போற்றுதற்குரியது.

'மாயவன் மலரடிக்கு' அமைந்த பாடல்களிற் சில முன்னிலைப் பராவலாகவும் சில படர்க்கைப்பராவலாகவும் இன்னும் சில நிந்தாஸ் துதியாகவும் வேறு சில கண்ணனின் லீலைகளைச் சித்தரிப்பனவாகவும் விளங்குகின்றன. இப்பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்களுள் சுடர்மிகுந்தோங்கித் துலங்குவது ஓர் உன்னத சிந்தனை, கவிஞரவர்கள் தம் பள்ளிப்பராயம் முதல் இறுதி மூச்சுவரை சமதர்மவாதியாகத் திகழ்ந்தவர். சமதர்ம வாதத்தின் தாரக ஓசை வெறும் புறநிலைச் சமத்துவமட்டில் அமைந்ததன்று சர்வபூத இருதயத்துவம் அல்லது ஆன்மநேய ஒருமைப்பாடே **( Universal Mind )** சமதர்மத்தின் இதய ஒலியாகும். இச்சமதர்ம அடிநாதம் கவிஞரின் பாடல்கள் பலவற்றில் ஒலிக்கக்கேட்கிறோம்,

இச் சிந்தினையில் நின்று,

'மொழிவெறியும் மதவெறியும் முரணும் சாதி
முழுவெறியும் மூண்டு பெருந் தீயாகாமல்'
வழிதவறுத் தேவருக்கும் வழியைக் காட்டும்
வண்ணமிகு கண்ணனுக"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயவனை காண்கிறார். இந் நெறி காட்டும் முறையில்

’சாந்திதரும் கீதையெனும் சாத்வீகப் பேர்
சமதர்மப் பனுவல்’ தனை.

கண்ணன் சமைத்ததாகச் சாற்றி மகிழ்கிறார். எல்லா மக்களும் எல்லா நலன்களும் பொருந்தி வாழ்தற் கியன்ற பொதுவுடமையே அவரது அனுசத்தான வேண்டுகோளாகப் பல பாடல்களில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இவ் வேண்டுகோளை மையமாகக் கொண்ட பாடல் நூலின் பூர்த்திச் செய்யுளாய்ப் பொலிவுற்று பரிணமித்து பரிமளிக்கிறது. ‘மாயன் மலரடி’க்கமைந்த பாடல்களின் சொல்லும் பொருளும் தொடையும் நடையுமெல்லாம் பத்தி வெல்லம் கனிந்து இனிக்கிறது.

கவிஞர் மகாலிங்கம் அவர்களின் நிறை புலமையும் உலகியல் பேரறிவும் சொல்விற்பன்னமும் இவற்றுக்கு மேலாக இறைபக்தி யுணர்வும் ஒன்றிய நிலையில் உருப்பெற்றனவே மாயவன் மலரடிக்குச் சாத்திய கவிமலர்கள்.

— வ. சிவராசசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ ராமஜயம்



# பகவானின் அவதாரங்கள்

## ஆதி அவதாரம் - அநிருத்தன்

பூதலமென் றொன்றில்லாப் போழ்தி லிங்கும்
    புனலொன்றே நிறைந்திருந்த பூர்வகாலம்
சீதளநன் னீர்தனிலே சயன மாகிச்
    சீர்பெறுநல் யோகத்தின் சிவணி நின்ற
போதகனே அநிருத்தப் பெருமா னேநற்
    பொற்குன்றே பரிசுத்தப் பொருளாய் நின்ற
ஆதவனே யொளியூட்டு மருட் பிழம்பே
    ஆழ்ந்தநின தறிதுயில் நாம் உணரற்பாற்றே.

( இது பகவானின் சாத்வீக பரிசுத்தப் பேருருவம் உலகு தோன்றுவதற்கு முன்பிருந்த நிலப்பரப்பில் சயனித்து யோகத் துயிலில் ஆழ்ந்திருந்தமையைக் குறிப்பதாகும்.)

## மச்ச அவதாரம்

அச்சமிலாப் பிரமனுந்தான் துயிலில் ஆழ்ந்தே
    அயர்ந்திட்ட போதிலவன் அருளிச் செய்த
துச்சமிலா வேதங்கள் தமைக் கவர்ந்த
    துட்டனெனுங் கயக்கிரீவன் துடுக் கடக்க
மச்சவடி வாய்வந்து மறைகள் தாங்கும்
    மாண்டவுயர் வேதங்கள் மீட்டளித்தாய்
சத்தியநல் விரதனையும் சார்ந்து காத்தே
    சாமருவு பிரளயத்திற் காத்தாய் மன்னே.

( சத்தியவிரதன் என்ற மன்னனைப் பிரளயத்திலிருந்து காப்பாற்றி, அதேவேளையில் பிரளயத்தைப் பயன்படுத்தி கயக்கிரீவன் என்னும் அசுரன் பிரமதேவன் அயர்த்த காலை வேதங்களை அவரிடமிருந்து கவர்ந்து சென்றதால் அவற்றையும் மீட்டமை இங்கு குறிப்பிடப்படுகிறது, )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூர்ம அவதாரம்

மந்தரமென் பெருங்குன்றை மத்தே யாக்கி
மாநாகம் வாசுகியைக் கயிற தாக்கி
இந்திரற்கும் தேவர்க்கும் இதயம் வேண்டும்
இன்னமுதை யீந்திட்ட வெம்பி ரானே
சுந்தரநல் மோகினியாய் அசுரர் தோற்க
சொக்கவைக்கு முருவெடுத்த சுந்தராவெம்
எந்தையெனக் கொண்டாடு மெம்பிரானே
ஏழைகுலம் வாழவைக்கு மிறைவன் நீயே.

(பாற்கடலைக் கடைந்து தேவருக்கீந்தமை, மோகினியுருவில் அசுரரை வென்றமை குறிப்பிடப்படுகிறது)

## வராக அவதாரம்

நீணிலத்தே தருமத்தை நிலைக்க வைக்க
நீசர்தமை நிருமூலம் செய் நிருபர்
காணரிய கருணைமிகு கண்ணு வெங்கள்
கண்ணிறைந்த கனிவான கருணை வள்ளல்
பேணுமொரு நீதிதனிற் பிறழா தோம்பப்
பேரரக்கன் இரணியாக் கதனே யென்னும்
வீணனவன் றனைவீழ்த்தி வெற்றி கொண்ட
விறல்மிக்க வராகமுனை வேண்டி னேமே,

(இரணியாக்கதன் என்னும் அசுரனை வென்றமை)

## நரசிம்ம அவதாரம்

"காட்டடா கடவுளை" யென் றுணவத்தின்
கடுங்குரலோ னிரணியனென் கயவன்றன்னை
வாட்டிடவே பிரகலா தப்பேர்ச் சேயை
விடுத்திட்ட நவநீத மாயக் கள்வா
மீட்டொருநல் நரசிம்ம மாகத் தோன்றி
மிதித் தொழித்தே மேலான நீதி தன்னை
நாட்டியநன் நாயகனே நானி லத்தின்
நற்றவத்தி லுயர்பேறே நலத்தி னூற்றே.

(இரண்யகசிபு என்னும் அசுரனின் ஆணவத்தை பிரகலாதன் மூலம் அறிந்தமை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாமன அவதாரம்

கருமிருள்சே ரஞ்ஞானம் கனிந்து நின்றே
கயவருக்கே யிவ்வுலக மென்னுங் காலே
பெருமறிவுப் பேரொளியென் பிழம்பாய் தோன்று
பெம்மானே பாரதத்தின் பெரும்பேருன
திருமருவு கீதைக்குத் தாதை நின்னை
தொழுதமகா பலிதனக்குத் தூய ஞானம்
தருமிறையே தத்துவத்தின் தலைவா நின்றன்
தாழ்பணிவோர் தமக்கின்பம் தருகுவாயே.

(மகாபலிக்கு ஞானம் பெறச் செய்தமை.)

## பரசுராம அவதாரம்

சுயநலத்தா லுந்திட்டோர் சோதியாமுன்
சோதரரா யினுமாழி சூழ்ந்த பூவில்
புயவலியால் நீதிநெறி பிறழ்ந்தா ராயின்
புல்லரென அவர் தம்மைப் புரிந்து கொண்டே
கயமையினல் பரசுரா மன்றுன் பெற்றே
காந்திடுநற் காமதே னுவின்பே ராலே
உயர்நீதி தனையுலகுக் குணர்த்த வேண்டி
உதித்திட்ட ஒளிப்பிழம்பே உயர்விளக்கே

(காமதேனுவைக் கவர்ந்து பரசுராமனின் தவ வலிமையை ஒழித்தமை.)

## ஸ்ரீ ராம அவதாரம்

தவவலிமை தாங்குபெரும் சக்தியாகத்
தங்கத்தால் முடிசூடித் தரணி யாண்டும்
அவமாகவ் வலிமைதனை அழிவென் றுற்றில்
அழித்திடுவோர் தமக்கிங்கே அருளில் லாயின்
சிவமான உண்மைதனைச் சிந்தித் தோங்கச்
சிறப்புறுநல் ரகுராம னுகி வந்தே
சயமான ராவணனென் சழுக்கர் கூட்டம்
சரித்திட்ட சத்தியநின் தாழ்கள் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருஷ்ண அவதாரம்

நானென்னு மகங்காரம் கொண்ட கம்சன்
நரருள்ளே வலியவனென் றெண்ணி நாட்டின்
தானொருவன் முனிந்தத் தரணி யாளும்
தகைமை பெற்று னென்றெண்ணும் நினைவைமாற்றி
ஏனெனக்கேட் பதற்கெவரு மில்லா வேளை
இடியேறு போலவன்மே லெழுந்த கண்ண
நானுண்டு நீதிநிலை நிறுத்த வென்றே
நவின்று குதி நந்தகோ பாலபோற்றி.

## பலராம அவதாரம்

மலையான பெருவீர மாண்பு தாங்கி
மண்ணுலகி னடலேறாய் மதித்த மன்னன்
பலராமன் சுயநலப்பே ராசை தூண்ட
பாந்தமிகு காமதேனுவை யே கொள்ளக்
குலமகனு மந்தணனும் குறிக்க வந்நாள்
கொடியேந்திக் கொக்கரித்து நின்ற காலை
தலமான வல்லிபுரப் பதியில் தங்கி
தருமமதை யவற்கன்றே உணர்த்தினையே

## "கல்கி" அவதாரம்

நலிவுற்ற மன்குலத்தின் மிடிமை நீவி
நவமான புத்துலகை நல்லோர்காண
கலியுகத்தில் கல்கியா யவதரித்துக்
கருதுமுயர் பரிமுகத்தோ டுயர்ந்து காணும்
புவியெனவே பூதலத்தோர் புகலும் கீழாம்
புன்மைகளைப் புதைத்திங்கு நீதி நாட்டிக்
கிலியொழிக்க வருகண்ண கீழோர் அஞ்சும்
கீதைதரு நாயகனே எழுக மாதோ.

(கலியுக முடிவில் குதிரை முகத்துடன் "கல்கி" அவதாரம் எடுத்து நீதி, ஒழுக்கம் என்பவற்றை நிலைநாட்ட விருப்பது குறிப் பிடத்தக்கது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

### வெண்பா

பூபாரந் தீர்த்துலகப் புன்மைகளைப் போக்கிடவே
மாபா ரதமியற்று மாயவனே — கோபாலர்
நெஞ்சுறையு நீர்மையனே நீலமணி வண்ணநினைத்
தஞ்சமடைந் தேனென்னைத் தாங்கு.

பன்னரிய நின்னருளைப் பாடித்துதித்து நிதம்
என்னெளிய செந்தமிழா லேத்துதற்கு என்னகத்தே
என்றென்றும் நீயுறைந்தே எண்ணங்க ளூற்றெடுக்க
நின்றருள நேர்ந்தே னுனை.

விள்ளரிய வீரமுறை வேய்ங்குழலான் கண்ணனெந்தன்
உள்ளமது புக்குறைந்த வேழமவன் — கள்ளமிலாச்
சிந்தையொடு சேவித்துச் சீர்த்தாள் பரவிடினே
சந்ததமுங் காத்தருள்வான் தான்.

(1)

கத்துகடல் சூழீழ வேந்தனைச் செருமுகங்
கண்டவனை வேரறுத்தே
கயமைக் கவன்மூலம் வரைவிலக் கணந்தந்த
கண்ணனே கமல முறையும்
உத்தமிக் குரியனே உளமுறைந் தெனையாளும்
ஓங்குல களந்த வீசா
உலகிலே யதர்மங்க ளுருவாகு போதெலாம்
உதித்திட்டழித்த வொளியே
பித்தரைப் புறங்கண்ட போர்முகத் தேறன்ன
பெருமையுற் றுலகாண்டவா
பெருமைமிகு வல்லிபுரப் பதிதனைப் பீடமாய்ப்
பெற்றிட்ட பேரரசனே
சித்தமிசை நிறைகமலச் செங்கண வெனையாளும்
செம்மலே நீயன்றிநான்
செத்தபிண மல்லவோ சீர்வல்லிபுர மேவும்
செறிகருணைக் கோபாலனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுமூட மதிகொண்ட கௌரவர் தமை வீழ்த்திப்
பகரறக் கொடிபறக்கப்
பார்த்தீபன் நிலைகண்டு பகர்ந்தநற் கீதையைப்
பண்புளந் தாங்கி நிற்ப
நடுநின்று நீதிபெரதி நல்லறம் நவின்றிட்ட
நாயகா நாராயணு
நாத்தழும் பேறுவரை யுச்சரித் திட்டாலும்
நலிவினைக் கண்டதிலையே
கொடுவினை புரிந்தோரும் கோபால னேயென்று
கொண்டதம் கொள்கை மாற்றிக்
குற்றத்துக் காயுளம் கொதித்திடின் அவரையுடன்
குடைதனிற் கொண்ட விறையே
கெடுமதிகள் புரையோடு கீழான மூடரைக்
கிழித்தழித் திட்ட முதல்வா
கேணியொடு பழனமும் சூழ்ந்திடும் வல்லிபுரம்
கிளர்ந்திடும கோபாலனே.

மந்திரம் பலகாலும் பரவிநித முன்பாத
மலர்க்கழல் போற்ற வறியா
மாக்களுன் தோழனுய் மனமகிழ்ந் தவரிடர்
மண்ணில் தொலைக்க வருவாய்
தந்திரம் சதியெனும் வலைகளைக் காணுத
தரித்திரர் நாடுமிறையே
தனியுயர் வேதமும் தத்துவமும் மொருசேரும்
தண்ணளிப் பெருங்கோ நினை
அந்தரந் தனிலிதயக் கோயிலு ளமர்த்தியே
அர்ச்சிக்கிங் கோடியுயிர்க்கும்
அபயமளித் திடுமன்ன னேயசோ தைத்திரு
அன்புக் கிலக்குமாகி
வந்துதித் திட்டவா வான்மீகி யேட்டிலே
வரைந்து தொழு தேத்துவண்ணு
வனப்புறும் வல்லிபுரப் பதிமேவு மெந்தையே
வரமருளி யோம்புவாயே.

கண்ணிறையு மாடகக் கவினுறுந் நகைபலவும்
காட்டியே மாதர் பல்லோர்
கருமிருள் தனிலுமே கண்ணநின் பதநாடிக்
கடிந்து நடந் திருசா மமும்
எண்ணிலவ ராபரணங் களவாடு மெண்ணமில்
ஏற்றமுறு பண்பு தாங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கித முடையவர் எழில்பாடு வல்லிபுரம்
எனுமேற்ற முறுபதியிலே
பெண்ணரசு ஒச்சிடும் பெருமைதரு மாந்தரின்
பீடுறும் இதயமிசை நின்
பேருருத் தாண்டவம் ஆடிடும் பெருமநின்
பேரிருள் தீர்க்கு மொளியே
விண்ணமுத மேநிகர் வேங்கையே வென்றிக்கு
வித்தாகி நின்ற பொருளே
வேதவியா சர்போற்றும் வேந்தனே மன்குலம்
வேண்டிடும் சிந்தை நிறைவே.

ஆடரவஞ் சூழமளி மீதுறைந் தேயன்பர்
அஞ்சலித் துளமுருகி நின்
ஆயிரம் பேர்பரவி அர்ச்சித் துளம்பொங்கி
ஆனந்தக் கூத்துமாடி
பாடரிய நின்மலர்ப் பாதமது வந்தித்துன்
பாற் கடல் நாடி வந்தே
பார்த்தனுக் குயர்கீதை யூட்டுதிரு வாய்தனைப்
பார்த்துளம் பூத்து நிற்க
தேடரியநின் புகழ்க் கீதங்கள் பலகோடி
தீந்தமிழ் தனிற் குழைத்தே
தித்திக்க வோதியுளம் தேனுகை மாறியே
திளைத்திட்ட கோவிந்தனே
கோடாதுயிர் வாழும் புழுமுதற் குஞ்சரக்
கூட்டமுதலான வுயிர்கள்
குறையாத கருணையென் குணக்குன்று நின்னருள்
குவையாக வீந்து நின்றாய்.

ஆடாத நான்மறைகள் பூகையா லகிலத்தின்
அதர்மங்கள் தமையழித்தாய்
அண்டமலி சராசரங்க ளொரு கோடியத்தனையும்
ஆட்கொண்ட ரங்கநாதா
கோடாத வன்புளத் தொருகோடி கைதொழக்
கோவர்த்தனக் கிரிதனை
கொண்டவெம் நந்தபா லாவுயிர் கோவிந்தா
குடையாக வேந்தியே கோபாலர்
குறைதீர்த்த கோவர்த்த நீலவண்ணா
மாடாக நலிந்துழைத் திருகோடி மாந்தரும்
மனமுடைந் தின்னலுற்றே
மன்னிடும் நீதியை மாபெரும் கானலாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றிலும் காணமுடியாக்
கோடானு கோடியின் குரல் கேட்டவனிமிசை
குதித்திட்ட கோபாலனே
குறையாத கருணையென் குணக்குன்று நின்ன
குவையாக வீந்தருள்கவே. [ருள்

மட்டவிழு மளகமதை மானத்தின் சின்னமாய்
மதிக்கா தவிழ்த்து விட்டே
மன்னுமுயர் நீதியினை நிலைநாட்டி மாதவர்
மதிப்புக் கிலக்காகினன்
அட்டதிசை புகழ்பரவு பாஞ்சாலி அஞ்சலித்(து)
''அபயமருள் கண்ணா'' வென்ற
அவலக் குரல் கேட்டு விரைவில் வெளிவந்தவன்
அச்சமது தீர்த்தாண்டவா
துட்டநிக் கிரகஞ்செய் திட்டநா ராயணா
துதிப்பவர்க் காரமுதமாய்
தோன்றாத் துணையாகத் தூணிலும் துரும்பிலும்
தோன்றிடுங் கார்வண்ணனே
சிட்டர்தம துள்ளமுறை தேவனே யெமையாளும்
சீர்பூத்த மாயவா நின்
திருச்சந்நி தானத்தில் குறையிரந் தேபரவிச்
சேவித்து நின்றனமரோ.

வாசமெழு மலரளக பாரமும் தண்மைசெறி
மதிமுகத் தொளிவீ சிடும்
வண்ணமுறு கோபியர் வைத்த நவநீதமதை
வன்களவிலுண்ட கண்ணா
ஆசகலு நால்வேதப் பொருடனைக் கீதையாய்
அகிலத் துரைத்த மன்னா
தேனனைய ரானர் மகிழ் திவ்யசுந்தரரூப
தீதுமலி வாழ்விலுந்தன்
மாசகலு திருநாமந் தனைநாளு மர்ச்சிக்கும்
மன்குலம் ஓம்பி யொளியாம்
மாண்டநன் மதியீந்து மந்திரச் செல்வமாய்
மலரத் துணை செய்குவாய்
ஆசறுத் தாண்டுகொண் டருளுவாய் நல்வாழ்வென்
றன்புடன் வேண்டுகின்றோம்
அலைமணிக் கடல் மருவுவல்லிபுர வாசனே
அச்சுதா அமர ரேறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சனைய தீயவர்க ளுறவினை லுனைநீங்கி
நாத்திகம் பேசி நறவாம்
நன்னீழ வாமுனை நாடா தொழிந்தேனை
நல்லறி வுறுத்தி யாள்வாய்
விஞ்சுதவ ஞானியர் விண்ணவர் முனிவர்களும்
வேண்டிநித மேத்து முதல்வா
விழலான வென்வாழ்வில் வேம்பினை வீழ்த்தியே
மேலான வாழ்வளிப்பாய்
தஞ்சமென வுன்திருப் பாதங்கள் தாழ்ந்துநின்
தனியனுக் கருள் புரிந்தே
தாவிலா வுன்கிருபை நாளுமே தாங்கிடும்
தகுதிதனை யீந்தருளுவாய்
மஞ்சுதவழ் கோபுரம் மாடமலி கோயில்கள்
வல்விபுர நாத பச்சை
மலையனைய மேனியெழில் தருபவள வாய்கமல
வண்ணமுறு செங்கண் மாலே.

நிலையான பேரறிவும் நிறைவான வாயுளும்
நிந்தனையி லாதகிளையும்
நேரான சிந்தனையும் தேயமா ரின்சொலும்
நெறியா மொழுக்க நிலையும்
சிலையான வெழிலன்பு மனையாளும் செறிமாண்பு
சீரான சந்தானமும்
தாழாது புகழொடும் தருமமே வழிநின்ற
தன்னல மிலாத செயலும்
குலையாத செல்வமொடு குன்றாத வின்பமும்
குவைஞான வளங்கள் பலவும்
கொள்கை தனி லசையாத குறிக்கோளு மேலோங்கக்
கொண்டுமே வாழவழி தான்
அலையாழி அறிதுயிலு மாயனே அன்பருளம்
அருளொளி பூத்து நிற்கும்
ஐயனே ஆயர்குல மெய்யனே எமையாளும்
ஆதியே யருளுவாயே.

ஆதிமா மூலமே யபயமென் ருேலமிட்
டலறித் துடித்த காலை
ஆனையாம் அன்பனுக் கருள் செய்த வள்ளலே
அணைத் தெமக் கருளுவாயே
ஆதிமா வருளான ரடியவர் பெருவாழ்வில்
அருமிடர் தீர்த்த கண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைமோது முயர்தனிப் பதிவல்லிபுர நாத
அரங்கத் துறையு மிறைவா
மேதினிக் கூன்றுகோல் போல் விளங்கிடுவனே
மெய்கண்ட மேதைகட்கு
மேலான வோசனுய் மிருளிநல் வீசனே
மேவிடு மிருளீக்கவே
சோதிமா முதலான சுடரருட் செல்வனே
சுந்தர மது சூதன
சொல்லொண விடர்தாங்கு மென்னையும் கைதூக்கி
சுகமளித்தருளுவாயே.

எண்சீர் விருத்தம்

என்னிறந்த வீரமன்ன ரிதயத் துள்ளார்ந்
தீழத்தில் வல்லிபுர வெழிலாம் நெய்தல்
தன்னிடமே தகுக்யெனத் தரித்து வாழும்
தருநிழலே தாங்கொணத் துயரந் தாங்கு
வண்ணமிகு வச்சிரம்பா யுளம் வழங்கி
வரமருளு முயர்கண்ண வள்ளா லெந்தன்
கண்மணியே மணிவண்ண கார்மே கம்போல்
காசினியைக் காப்பதுமுன் கடமையன்றோ.

ஓங்கியுல அந்தையோ ரடி யளந்த
உத்தமனே நின்பெருமை உரைக்கற் பாற்றோ?
பாங்குடனே கவிவடிக்கப் பாவியேன் யார்?
பலகோடி யுகமன்றோ வேண்டு முன்றன்
வேங்கைநிகர் வீரத்தை விளம்பு தற்கு
வேதமுணர் வியாசனே கம்பனே நல்
வீங்குபுகழாள்வாரோ விண்ணு லாவும்
விசை தாங்கு சித்தரெனும் வேந்தரோயான்.

பன்னரிய னிசைக்கலையும் பக்தி மேவும்
பண்புளமுங் கொண்டபெரு வீரனும்
தென்னிலங்கை வேந்தனது தீயசெய்கை
தீட்டாகக் கொண்டவனைத் திருத்த வேண்டி
உன்னரிய படைசெலுத்தி உலகு போற்ற
உன்மத்தம் தனைவீழ்த்தி உயர்ந்த வானோர்
கன்னலென வுளத்தோம்பு கண்ண நின்றன்
களிபெருகு மருளீந்து காத்திடாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்திமக ஞப்பிறந்தும் உலகமேத்து
முத்தமிய சோனததன துள்ளந் தாங்கும்
திருத்திடவே யியலாத திருடனுகித்
தித்திக்கும் நவநீத முண்ட பாலா
அருச்சிக்கு மடியருளம் புகுந்த செல்வ
அண்ணலே யாரமுதே அன்பர் தம்மைக்
கருத்துடனே காத்தருள்வாய் கற்ருேர் போற்றும்
கதிவல்லி புரமேவு கடவுள் நீயே.

காந்தமென ஈர்க்குமுன தரிய சக்தி
காசினியெ லாம்பரந்து கவர்ந்த தாலோ
பாந்தமிகு பல்வேறு நாட்டோ ரெல்லாம்
பத்திமே லீட்டினுற் பரந்தா மாவெம்
வேந்தலுனைக் கிருஷ்ணகோ விந்தா வென்னும்
விருப்பமிக வன்பினுல் விண்ணளாவ
சாந்தமொடு ஹரே கிருஷ்ணு சாயி யென்றும்
சந்தமுறு கவிபாடிச் சார்கின்ருரே.

இந்தநாட்டவ ரெல்லா மிதயம் பூரித்
தெழிலாருந் தென்னிலங்கை தொடக்கமிங்கு
நந்தமிழர் வாழ்பருத்தித் துறையீருக
நாராயணுநம என்று நாளும்
சிந்தனை செய்தேகாத லாகிக் கண்ணீர்
சிந்திநிற் போர்க் கொளிவீசு செம்மீனேயெம்
செந்திருவே கொண்டாடும் சீர்படைத்த
சிறீதரனே யுன்ருழ்கள் சேவித் தோமே.

நாடொன்று பாண்டவர்க்கு நல்க வேண்டி
நாடியே கௌரவரை நயந்து கேட்க
பீடொன்று நின்பெருமை நினையா தோர்பால்
பெருமனத்தோ டெழுந்திட்டாய் பேரம் பேச
கேடொன்றி லாவிதுரன் கீர்த்தி யோர்ந்து
கீழ்ப்பணிந்தே யுபசரித்துக் கேண்மையோ டென்
வீடுன்றன் வீடன்ருே என விளம்ப
விரும்பியவன் வீடுறைந்த வேந்தே போற்றி.

கோபாலா கொண்டகுறி தவரு நீர்மைக்
கொற்றவனே ஏழைகளின் கோவே யன்பின்
மாபாரச் சங்கிலியின் மாட்சி கண்டே
மதிப்பளிக்கு மெம்மிறையே மகிபா விந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூபாரந் தீர்ப்பதற்குப் புவியில் தோன்றி
புல்லியரின் கூட்டத்தைப் புழுதி செய்தாய்
மாபார தம்போற்று மன்னு மாய
மண்ணுலகி னொளி விளக்கே மதியி னூற்றே.

அன்புறுநின் கேண்மைதனக் கணியா யுன்னை
அணுகுகுசே லற்களித்த வருளா ளாவெம்
என்புறையும் பெருமிறையே எட்டுத் திக்கும்
எழிலார நிறைந்திட்ட விறையே யெங்கள்
மன்குலத்து மாமணியே மாயக் கண்ணா
மாண்புமிகு தேவர்க்கும் மகிபா லெங்கள்
அன்பகலா வணிகலனே அகிலம் போற்றி
அர்ச்சிக்கு முயர்தேவே அருளுவாயே.

நேயமுறு நின்னடியார் நெஞ்சகத்தே
நிதமுறையு முயர்கோவே நிருபா என்று
ஆயர்குலம் தொழுதேத்தி அடிபணிந்த
அருமருந்தே நப்பின்னை யணைத்த கோவே
தாயரிலும் பரிந்துமிக்க தயவு காட்டித்
தஞ்சமென வடைவோரைத் தாங்கும் தேவே
மாயவனே வல்லிபுரம் மகிழ்ந்து வாழும்
மாபார தக்கீதை மலர்ந்த கண்ணா.

ஆயர்குலத் கொழுந்தேநல் லறிவி னூற்றே
அறமுரைக்கும் பேரிறையே அடலே றேயெம்
மாயவனே மன்குலத்தின் மணி விளக்கே
மண்ணுண்ட திருவாய்க்குள் மாதா வுக்கு
நேயமுடன் அனைத்துலகும் காட்டி நின்றாய்
நிரட்டுரமே புரிந்திட்ட மாமன் கம்சன்
பேயனைய வாணவத்தைப் பிழந்து நின்றன்
பெருமைதனக் கிணையுந்தன் பெருமை தானே.

புல்லாங் குழற்கீதம் புந்தி சேரப்
புவனமெலா முன்னகத்தே புரந்து மாய
வல்லாளர் எமதிறையே வாழ்வி னின்பம்
வழங்குநவ நீதவண்ணா வளமாய் நாட்டின்
புல்லியரை யொழித்திந்தப் புவியை யன்பால்
பொல்லாங்கு புரிவோரை யொறுத்து மண்ணைப்
புரந்திடவே யவதரித்த புண்ய மூர்த்தி
நல்லாரைப் பேணுவதே நயந்த போக்காய்
நாடியருள் நப்பின்னை நயந்த நாதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைசாய்ந்து வணங்குபெரு கதலி யோர்பால்
தன்பழனஞ் சூழ்தரளச் செந்நெ லோர்பால்
கலைசேருங் கன்னியரின் காட்சியோர் பால்
கண்குளிரு முயர்பச்சைக் கழனி யோர்பால்
நிலையான புடம்போட்ட நெறியில் நிற்கும்
நேர்மையுணர்ந் திடுபெரிய நீதியாளர்
மலையாக நின்றியங்கு மாண்பு சேரும்
மாபதியாம் வல்லிபுர முறையு மன்ன

பொங்கு துயர்ப் பனிமலைகள் புரண்டுசாய
புன்மையெனுந் தீவினைகள் பொடியேயாக
அங்கமெலாந் தொழுநோயா லழுந்து வோரும்
ஐயாவென் றுயர் கரத்துக் கன்பு சேர்த்தே
பங்கமறுத் தாளுபரந் தாமா வெங்கள்
பாரதத்தின் நாயகனே போற்றி யென்றும்
துங்கமிகு வல்லிபுரக் கோயில் புக்கு
தோத்தரிப்பர் காப்பதுநின் கடனே யன்றோ

திடர்விளங்கு வல்லிபுரத் திருவிடத்தே
திருப்பள்ளி கொள்ளுமுயர் திருவிளக்கே
கடல்விளங்கு கார்வண்ணக் கண்ண நின்னைக்
கருத்தினிலே வைத்தவர்க்குக் கவலை மாயும்
மடமையது தானொழியும் மகிழ்வு மோங்கும்
மனைவாழ்க்கை மக்கள் பொருள் மதிப்பு மோங்கும்
திடமுடைய செல்வமது செழித்தே யோங்கும்
திருவுடையார் வழிவழியே சிறக்க வாழ்வார்.

வேறு

வல்வினை தீர்க்கும் கண்ண வடமது ரைவாழ் மன்ன
சொல்வினை யனைத்துந் தீர்க்கும் தோன்றலே சோதியே யெம்
நல்வினை யுருவாய் வந்த நாதனே நம்பி னோர்க்குத்
தொல்வினை யிருள் துடைக்கும் சுடரொளி நீயே யன்றோ.

மாந்தரின் துயர் துடைக்க மன்னுல கதனில் நீதி
ஏந்திடு விதுரன் வீடே வீடெனக் கொண்ட வேந்தே
சார்ந்திடு பார்த்த னுக்குச் சாரதியாக நின்றே
ஓர்ந்திடு மறையு ரைத்தே உலகினைப் புரந்தாய் கண்ணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள் முனிவரோரும் திருநிறை மேதை நின்னை
ஏவரும் பக்தியோடும் இதயத்துள் ளிருத்தி யெங்கள்
காவலன் கடவு ளென்றே கனிவுறச் சேவித்தென்றும்
பூவலம் வந்து போற்றப் புரந்திடு திருவே போற்றி.

கட்டளைக் கலித்துறை

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி மாலையைத் தோள்தனிலே
நாடியுணிந்திடு நாயக னேயிந்த நானிலத்தில்
பாடித் துதித்துன் பாதம்பணி வோர்க்குப் பலமளித்துத்
தேடித் துணையென நின்றருள் தெய்வத் திருவிளக்கே

எண்சீர் விருத்தம்

மட்டவிழுங் கருங்கூந்தல் மங்கை யோர்தாம்
மணிக்குரலாற் கிள்ளைகளை மகிழச் செய்ய
கட்டவிழ்த்த வீரமொடுங் காளை யோர்கள்
களிப்புடனே கழனியெலாம் பவனி போக
அட்டதிசை புகழுமுய ரன்பர் கூட்டம்
அரிநாரா யணவென்றே அருகு நிற்க
துட்டர்தமை இங்கழித்துச் சிட்டர் காக்க
தொல்புகழ் சேர் வல்லிபுரம் அமர்ந்தா யன்றோ.

மணிமுடிகள் தரித்தோரும் மண்டி யிட்டே
மாதவனே யெனவணங்கி மகிழும் கண்ணா
அணியெனுநல் லறத்தினுக்கச் சாணி யாகி
அகிலத்தைக் காத்தருளி யாளும் மன்னா
துணிவுடனே பாண்டவர்க்குத் தூது சென்றே
துரியோத னர்கூட்டம் துகளாய்ப் போக
பணிபுரிந்த பரந்தாமா பாரோ ரேத்தும்
பாற்கடலிற் பள்ளி கொள்ளும் பத்ம நாபா.

இல்லார்க்கு இல்லானாய் எளியோர் தங்கள்
இதயங்கள் புக்கின்ப மீயும் தெய்வம்
கல்லாரும் கண்ணனெனக் கதறித் தேம்பக்
கருணையுரு வாய்வருநற் கனியாம் தெய்வம்
வில்லாளன் விசயனுக்கு விளப்ப வல்ல
விறல்மிகுந்த சாரதியாய் விளங்கு தெய்வம்
பொல்லாரைப் பொடிசெய்து புரக்குந் தெய்வம்
புவனமெலாம் போற்றுகின்ற புனித தெய்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சலமென கருமேகம் சார்ந்து வாழ்வைச்
சகதியெனுந் துன்பத்திற் சரிக்கும் காலை
நெஞ்சகத்தே ஒளிபாய்ச்சி நீதி கூறி
நிலையான வரமாக நின்று துன்பம்
பஞ்செனவே பறக்கச் செய் தபய மீயும்
பரந்தாமன் கருணைதனைப் பாவிற் சொல்ல
விஞ்சுதிறன் மிக்ககவி வேந்த ரன்றி
வேறெவரால் இவ்வுலகில் இயலும் மாதோ.

சிந்தைநிறை கார்வண்ணா சிறுமை நீக்கும்
சீரியசிந் தாமணியே செங்கண் மாலே
அந்தமிலா வருளீயு மையா நின்னை
அடைக்கலமென் றடைவோரி னின்னல் தீர்க்க
முந்துறுமோ ரருமருந்தே முனைந்த பாச
முயக்கறுக்கும் முன்னோனே முதல்வா கீதை
தந்தவொரு சற்குருவே உலக மெங்கும்
சாந்திபெற அருளுவையே தயவு கூர்ந்தே.

வேறு

அண்டசர வசரங்க ளத்தனையு மாட்கொண்டே
அபய கரமீயூ மிறையே
ஆலிலையின் மேற்றுயின் றவனிகாத் தருள்வனே
அன்பரின் நெஞ்சமுறையும்
விண்டமரர் போற்றியே வீழ்ந்து வணங்கிடு ஞாலம்
வேண்டியே யேத்து மிறையே
விதியென்று கவலுவோர் வாழ்விலே யொளிவீசி
வெற்றிக்கு வழிகாட்டுவாய்
மண்டுமுழு மூடமதி கொண்டுலக மக்கடமை
மாக்களே யெனமதித்தே
மனிதருக் குரித்தான மணியான உரிமைகளை
மறுத்தவர் காலனுனை
குண்டராங் கௌரவர் கொடித்தம்ப மதுசாய்த்த
கொற்றவா நிருப ரிறையே
குவலயத் தெந்நாளு முயர்நீதி வழுவாது
கொண்டெம்மை யாளு மரசே.

தருமத்தின் வாழ்வதனை யதர்மம் கௌவும்
தருணத்தில் குதித்துலகைத் தாங்கு கண்ணா
இருளீக்கி யுலகாளு மிறையே யன்பர்
இதயத்தில் குடியமர்ந்து எழிலே பூண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமருந்தே யடலேறே அழிவை நாடும்
அரக்கர்தமை அழிப்பவனே அன்பினூற்றே
திருமறைகள் போற்றிசெயும் மன்னா நீலத்
திருமேனி கொண்டவனே சரண மையா.

ஏழைகுலங் கொண்டாடு மினிய னாக
எளியோர் தங்கண் மணியாய் ஏத்திநிற்க
வாழையடி வாழையென வறுமை தன்னில்
வாடிடுவோர் நாயகனைய் வாழ்த்தி நிற்ப
நாவையுண வெங்கென்றே நலிந்து நிற்போர்
நம்மிறையே எனப்போற்றி நாடி நிற்ப
கோழைகட்கும் வழிகாட்டுங் கோபாலா நின்
குளிர்மதியக் கழலடி கொண்டாடு வோமே.

வேறு

துட்டரெனு மசுரரின் தூசியே வாராது
தூயரா யெமையோம்பு வாய்
துர்மதிச் செயல்கண்டு தூரநிற்போர் தங்கள்
துணைவனே துளசி வேந்தே
அட்டதிக் கெங்கணும் அன்புசால் பண்புகள்
ஆனந்தக் குர லெழுப்பி
ஆணவத் தோடகங் காரமிவை யழிவெய்த
ஆர்ப்பரித் திட்ட திருவே
நிட்டர் தமையாளவே நீணிலம் புகுந்தறையும்
நிர்மலா நேயர் நெஞ்சம்
நிறைந்தமது சூதனா நீள்விழிக் கோபியர்
நிதந்தொழும் நீலவண்ணா
மட்டவிழு மலர்க்குழலி ராதைதன் மனமகிழும்
மாயவா மன்னர் மன்னா
மங்கையவள் பாஞ்சாலி யுறுமான பங்கமதை
மதியினால் காத்த மறையே.

வேறு

துளசிநிறை யடவிதனில் தூய்மை யோடும்
துரிசில்நின் பதமலரிற் றூவ வேண்டித்
தளருமுட லொருகோடி சாமந் தன்னில்
தணியாத பக்தியொடு தயக்க மின்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளமுருகிக் கொய்வதனை உளம்பூரிக்க
உவந்தேற்குங் கண்ணநின் ஒளியை நாடும்
வளமிலர்க்கும் வரமாக வழங்க வேண்டி
வாயார நின்நாமம் வாழ்த்தி னேமே.

படுமோசப் பண்பிலரும் பாரில் நல்ல
பண்பாள ரெனப்போற்றிப் பாடி யேத்தும்
கெடுமூட மதிகண்டு கிளரு மேலோய்
கீழான செயற்கெதிராய்க் கிளர்ந் தெழுந்தே
வடுவாக வெதிர்த் தாங்குப் போர் தொடுக்கும்
வள்ளலே மீண்டுலகில் வரவே வேண்டி
நடுநிலையில் நின்றுன்னை வரவழைத்தே
வாழ்த்துதற்கு நிற்கின்றோம் வருவா யேநீ.

வேறு

சிந்தமுத மொழிதவழ் கோபியர் வெண்ணெயும்
சேலையுந் திருடு கள்வன்
சீர்பெருகு மவரிதயக் கோயிலிற் குடிகொண்ட
தெய்வமே சிந்தை நிறைவே
சந்ததங் கற்றுளார் சாத்வீக நெறிநிற்கும்
சாந்தமே யுருவாகினோர்
சார்ந்தவரி லுளங்கவர் கள்வனே மாயனே
சங்கம் முழங்கு களத்தே
பந்தமறுத் தேயின்ப துன்பப் பயனெலாம்
பார்த்திடா துன் கடமையை
பாங்குடன் செய்யென்ற பார்த்தசா ரதியேயெம்
பவவினை தீருவண்ணம்
விந்தைசெறி வேதநெறி கொண்டநற் கீதையை
விளம்பியே வென்ற விறையே
விண்ணதிர மண்ணகல மீதிலே நீதிநெறி
விதைத்தோங்கு வெற்றி வேந்தே.

அவலமே குடிகொண்ட அவனிமிசை வாழ்விலே
அலைந்துன்னை யண்டி வந்தே
அணைந்திட்ட வந்தணக் குசேலனுரா ரவலுக்கு
அள்ளிநீ வளமளித்தாய்
கவலையோ டுன்னுருக் கண்டுமே யீடெனக்
காணிக்கை யாகு கண்ணீர்க்
காதல்நிறை பதிகங்க ளொருகோடி தனையேற்ற
கண்ணனே கம்சனழியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவலயா பீடமென் கொல்களிறின் கொம்புகள்
கொண்டமர் செய்த கண்ணு
கொற்றவா நற்றவக் கோதிலா வேந்தலே
கொடுவினை தீர்க்கு மொளியே
தவமேழு பிறவியிற் செய்துமே தாண்டாத
தருவினைக் கௌதமுமாய்த்
தன்னெளி தனைத்தந்த தண்டுளசி பூண்டுபுவி
தாங்குவாய் புவியோங்கவே.

வேறு

தாமரைச் செங்கண்மாலே கனியொளிக் குன்றே விண்ணோர்
காமுறு கடலே நீலக்கண்ணனே கருத்தி லென்றும்
பாமலர் தொடுத்து நிற்கும் பண்புளோர் பாடிவாழ்த்தி
நாமமே யுரைப்பர் நெஞ்சை நாடுநன் மணியே வாராய்.

பேரொளி படைத்த கண்ணு
பெருமைசால் ஆழ்வார் கூட்டம்
தாரொளி தொடுத்து மாயத்
தாயினு மினிய தேவே
சீருறு திசைக ளெட்டும்
திகழ்ந்திடு திருவே யன்பர்க்
காரமு தனையாய் அன்னர்
அகநிறை மலர்த்தரள் வாழ்க.

புள்ளொலிகள் மேவுமுயர் புலோலி யோர்பால்
புன்மையிலாத் துன்னலை புறத்தி லோர்பால்
துள்ளுநடைக் கவிபுனைந்தே துதித்துப் போற்றும்
தூய்மை செறிகரவையெனும் பதியுமோர்பால்
கள்ளமிலாக் குடத்தனையும் நாகர் கோயில்
கருதுமம்பன் குணகடலும் சூழ்ந்து நிற்க
விள்ளரிய வொளியுடனே விளங்கி யோங்கு
விறல்மிக்க வல்லிபுரப் பதியே வாழ்க.

வேறு

என்னுயிர்த் தோழனு யோசனு யின்பமளித்
தோங்கிடுந் தெய்வமாகி
ஏங்கிநான் துயரினல் வாடிடும் போதிலே
எழுந்தருளு மொளியுமாகி
பன்னுநல் லருளினல் பாரித்தே யெனையாண்டு
பாரிலே தலை நிமிர்ந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றலர் தமைப்பணிய வைத்தநல் வல்லிபுரப்
பரிதியே நின்னருளை யான்
துன்னிருளி னொளியெனத் தோன்றாத் துணையதாய்
தூண்டுகோ லாகவன்றித்
துச்சமாய் மதித்தவன் தூங்கியே நின்றேனைத்
தூசியாய்க் கருதிடாதோய்
உன்னரிய வுளமோங்கு மூவகையென் னலைகளை
உண்மையை உணர வைத்தாய்.

எண்சீர் விருத்தம்

நிலைதவறு வடியார்க்கு நேய னாயும்
நினைவுதனில் நிறுத்துவர்க்கு நிருபனாயும்
கலைதவழுங் கலைஞருக்குக் கண்ணி றைந்த
காதலனாய்க் காதலியாய்க் கருத்திலூறி
மலையனைய தவத்தினர்க்கு மாண்பு சேர்ந்த
மனைவேலை யாளாயும் மலருங் கண்ணா
உலைமெழுகா யுருகுபவர் உளங்கள் மேவும்
ஒளிக்குன்றே யுன்பாத மிறைஞ்சி னேமே.

கண்ணிலான் பெற்றவரின் கால னாகிக்
கருதுமுயர் புவிநீதி காக்க வேண்டி
எண்ணிலா வவர்சேனை யெடுத் தெறிந்தே
ஏற்றமிகு பாண்டவர்க்கா யெழுந்த சோதி
பெண்குலத்தில் பெருமகனாய்ப் பெய ரெடுத்த
பீடுறுநற் கண்ணனைத்தம் பெரும்பே றாக
நண்ணிடுநல் லடியார்கள் நடுவி ருக்கும்
நாயகனே நின்பாத கமலம் வாழ்க.

மொழிவெறியும் மதவெறியும் முரணுஞ் சாதி
முழுவெறியும் மூண்டுபெருந் தீயாகாமல்
வழிதவறுத் தேவருக்கும் வழியைக் காட்டும்
வண்ணமிகு முயர்கண்ணா வானோர் போற்றும்
விழிபடைத்த விறல்வேந்தே வேண்டு வார்க்கு
வேண்டுவன வீபவனே வெண்ணெயுண்ணும்
பழியறுக்கும் பாரினிலே பண்பை யோம்பும்
பரந்தாம நின்பாதம் பற்றி னேமே.

வெண்பா

இன்மழலை தானுதிர்த்து ஏறியித யம்புகுந்த
புன்னகைசேர் பேருருவைப் பூவிலொரு — கன்னலெனும்
வஞ்சமிலான் அஞ்சலென்பான் வண்ணமிகு கண்ணனைநின்
நெஞ்சகத்தே கண்டின் புறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்ணெயுறி தாவியிங்கு வீம்புபய பேசிடுவான்
கண்ணனைய நற்கருணைக் காவலன்றன் — பண்ணமையப்
புல்லாங் குழலிசைத்தே பூதலத்தோர் நெஞ்சமெலாம்
புல்லரிக்கச் செய்வான் புகல்.

கொஞ்சுமொழிக் கோபியர்தம் கொற்றவனைக் கொண்டவர்
மஞ்சமென நெஞ்சகத்தை மாற்றிடுவான் விஞ்சுமெழில் (தம்
வீற்றிருக்கும் நீலநிற வெற்பனையாய் நின்புகழுக்(கு)
ஏற்றவுயர் நற்றமிழைத் தா

## வஞ்சப் புகழ்ச்சி (நிந்தாஸ் துதி)

(வெண்பா)

வெண்ணெய் திருடி மிளிர்வேய்ங் குழலிசையால்
வண்ணமுறு பெண்கள் மனந்திருடிப் — பெண்ணவர்தம்
கோலஞ்செய் யாடை குளிப்பிற் திருடிதனை
மாலென்று போற்றுவதோ மன்.

கோபியர்கள் கொஞ்சிடவே கும்மாளங் கொட்டிமகிழ்
மாபெரிய காதலுக்கு மன்னனெனப் — பூமியெலாம்
வீங்குபுகழ் தாங்குவனை வேந்தனெனப் போற்றியவன்
ஓங்குதற்கோ நெஞ்ச முரை.

கொஞ்சுமொழி பேசியொரு கோடியுளந் தான்கசிய
வஞ்சமிலா வாழ்த்துரைக்க வைத்தவனை — பிஞ்சுமனப்
பிள்ளையெனக் கொண்டாடிப் போற்றுவதோ இங்கிவனைக்
கள்ளனெனக் கொண்டாடும் நாம்

அஞ்சுபேர் மாலையிட்ட அஞ்சுகத்தை யாருமிலாப்
பஞ்சமுற்ற பார்ப்பானைப் பார்த்திபனென் — நெஞ்சமதில்
எண்ணிறைந்த ஏந்திழைகள் ஏற்றிவைத்தோன் தோழனை நாம்
கண்ணனெனப் போற்றுவது மேன்.

சேலனையார் நீராடிச் சேலைகளைத் தான்திருடி
பாலனெனத் தூக்குமெழிற் பாவையரைச் — சீலமுறும்
வண்ணவிதழ் முத்தமிட்டு வாரிநின்ற வம்பனையோ
கண்ணனெனப் போற்றுவது காண்.

சேரிப் புறமெங்கும் சேர்ந்துவிளை யாடியங்கு
வாரி யணைத்தெடுக்கும் வஞ்சியரை — சீரிழந்து
கொஞ்சிக் குறும்புநிறை கொண்டவனைய் நின்றவனே
விஞ்சுபுகழ்க் கண்ணன் விளம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சு மொழிபேசிக் குழைந்தே குறும்பு செயும்
வஞ்சகனை வாயார வாழ்த்திநிதம் — பிஞ்சுமனக்
கள்வனெனத் தொழுது கையேற்றி நின்றவனை
உள்ளமதிற் சேர்ப்பதே ஞேது.

வேறு

ஆற்ருதே யழுகண்ணீர் அகிலந் தன்னில்
அழித்தொழிக்கு மநியாய ஆட்சியென்றும்
மாற்றவேயி யலாத மறையின் உண்மை
மன்குலத்துக் குணர்த்திட்ட மாயக் கண்ணு
காற்ருகக் கௌரவரைக் கனன்ற தீயே
கண்ணபிரா னேநினது கழலை யேத்திப்
போற்ருத வுளமெல்லாம் போலி யென்றே
புகலுவோம் துணிந்திந்தப் பூவிலெங்கும்.

மாற்ருனின் வலிதனக்கு மதிப் பளிக்கும்
மாண்பதனைச் சிம்மாவ தாரமூலம்
கூற்ருக ''இன்று போய் நாளைவா''
கொற்றவனே குவலயத்தி னணிவிளக்கே
ஏற்காத கருத்ததனை எடுத்து வீசும்
எழிற்பிழம்பே இமையோர்தம் மீசா நின்னைப்
போற்ருத நாவெல்லாம் புன்மை தோய்ந்த
புழுதியெனக் துணிந்திங்குப் புகலலாமே.

மொழி குலமும் சாதிமத நிறமுமென்ற
முழுமூடப் பிரிவினையை முழுதாய்த் தள்ளி
இழிகுலமு மென்கேளி ரென விளம்பும்
ஈசனே சமத்துவதத்தி னின்ப ஊற்றே
அழிவறியா நீதியுரை அகமே நம்பி
அண்டிஞேர்க் கருள்ஞான விறையே யன்பர்
விழிநிறையு முயர்வேந்தே விண்ணோ ரேத்தும்
வேதனே நினதருளை வேண்டி ஞேமே.

எண்ணிறைந்த கோடானு கோடி யுள்ளம்
இரங்கிநின தருள்வேண்டி ஏங்கி நிற்க
விண்ணிருந்து மண்ணிறங்கி வேண்டு வோரின்
விசனங்கள் துடைத்தொளியை வீசுமின்பப்
பண்ணிறைந்த பரந்தாமா பார தப்போர்
படைத்திட்ட பகவானே பாரி லெங்கள்
கண்ணிறைந்த கண்ணுநின் கருணை தாங்கும்
கனிவான விதயமின்பக் காவே யன்ஞே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நள்ளிருளென் னஞ்ஞானம் நசுக்கி யெம்மை
நடைப்பிணமாய் நலிந்திட்ட வேளை தன்னில்
விள்ளரிய மெய்ஞ்ஞான விளக்கை யீங்கு
வித்தகனே வேதங்கள் வழைந்து போற்றும்
உள்ளமுறை யொளிவிளக்கே யுயர்ந்த வுண்மை
ஓருருவ ஓமெடுத்தன்ன ஓங்கு சால்பே
கள்ளமிலா வுளந்தேங்கிக் கருணை யாகக்
கலந்துறையுங் கண்ணனுயர் கண்ணேயன்றோ.

சாந்திதரு கீதையெனும் சாத்வீ கப்பேர்ச்
சமதர்மப் பனுவலதைச் சார்ந்து நின்றே
மாந்தியினி வருங்கால விளைவு ரெல்லாம்
மதிப்பளித்தால் மகிதலத்திற் போருமில்லை
காந்தியொடு மன்புவழி கண்ட பேர்கள்
கண்கண்ட வறநெறியாய்க் கருதி நின்றால்
ஏந்தியெம தின்பநெறி இதுவே யென்றே
ஏற்றிடுவோம் மன்குலத்தை யெளிதிற் காப்போம்.

நீதிக்குத் தலைகொடுத்த நிருபா நெஞ்சில்
நிறைந்திட்ட நித்திலமே நீலவண்ணா
வேதத்தி னுட்பொருளே விண்ணோ ரேத்தும்
விளக்கனைய சோதியனே விளம்ப வொண்ணாப்
போதையெனு மன்பருகு மூற்றே பொன்னே
புகல்வேறொன் றறியாதார் புரக்கும் கோவே
ஏதுமிலார்க் கின்பருளும் எய்ப்பில் வைப்பே
எண்ணமெலாம் எழுச்சியுற வைப்பாய் நீயே.

வேய்ங்குழலால் விண்ணோடு மண்ணும் விஞ்சு
வேதனையை மறந்தின்பம் விரவச் செய்யும்
தீங்கொழித்துத் தூய்மைதரும் திருவிளக்கே
தேடரிய மணிமார்பா தேசு மிக்க
பாங்குடைய தெய்வீகப் பனுவ லேயெம்
பார்போற்றி வணங்குபரந் தாமா கண்ணா
ஓங்குகட லலைநடுவே ஒளிர்ந்து நிற்கும்
உயர்குன்றே யுன்னருளை வேண்டினோமே

சீர்பெருகு சீலமொடு பக்தி செய்யும்
சேயிழையார் சேவிக்கும் செங்கண் மாலே
மார்கழிநீ ராடியுந்தன் மாண்பு போற்றும்
மன்குலத்துக் குன்னருளை மாந்தச் செய்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏர்பொலியும் வல்லிபுரம் மேவி நிற்கும்
எம்மிறையே யின்னமுதே ஏற்ற மிக்க
பார்புகழும் பாண்டுரங்கா பண்பி னூற்றே
பரந்தாமா பாரிதனைப் பாலிப் பாயே.

நெஞ்சகமென் மேடைமிசை நீதி தன்னை
நிறுத்திவைத்தால் நீளுலகில் தாதையென்ன
விஞ்சுதவத் தாயென்ன வேந்த ரென்ன
விளம்பரிய சுற்றமென்ன வீரரென்ன
கொஞ்சுமொழி மனையென்ன குழவி யென்ன
குருவென்ன நிதிகொண்ட கோமா னென்ன
மஞ்சனைய மாதவனே மதிப்பி லொன்றாய்
மாண்புநிறை கீதைதனில் மலர்ந்த கண்ணா.

சத்தியத்தின் நித்தியத்தைச் சாற்ற வேண்டி
சகமதிரும் பாரதத்தைச் சாதித்துப் போர்
உத்திகளைத் தத்துவத்தை உலகோர் கண்டே
உவந்துணர வைத்திட்ட வொளியினூற்றே
பத்திநிறை யுளமேனிப் பரந்து நிற்கும்
பரந்தாமா கெடுமதியோர் பயந்தொ டுங்கச்
சித்தியளித் தன்பருக்குச் சிறப்பு மீந்த
சீர்துளசி மணிமார்பா சேவித்தோமே.

தத்துவங்க ளோர்ந்திட்ட தாவில் ஞானம்
தாங்குநரும் அறநெறியைத் தந்த பேரும்
சித்தமதில் சீர்கருத்தைச் சேர்ந்திட் டோரும்
சிந்தனையா ளருமற்றும் செம்மை யுள்ள
வித்தகரும் விழைந்துண்மை வேண்டு வோரும்
விரும்புமொரு கீதையெனும் விந்தை நூலை
இத்தரணி யோரெல்லாம் இருமை நீந்த
இதுவழியே யெனத் தெருட்டி யீந்தகண்ணா.

கொடியோருக் கெதிராகக் குரலெழுப்பிக்
கோவிந்தா என்றுகுறையிருந் தோர்க் காக
கொடியேந்திக் கொக்கரித்துக் கொடுமை தன்னை
கொன்றுகுவித் திட்டவுயர் கோபாலா நின்
அடியார்கள் கூக்குரலை ஆழ்ந்து கேட்டே
அதிகார வாணவத்தை அடுபோர் தன்னை
முடிவுதனைக் கண்டுமூ வுலகோர் போற்ற
முகிழ்ந்திடுக கண்ணாவெம் முகுந்தா வின்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபியரி னுளமென்னும் கோயில் புக்கு
குடத்திலிடு நவநீதம் கொண்ட கண்ணா
பாவிகளி னுளங்களிலும் பரந்து நின்றே
பழிநிறையு மவர் பாதை நீலச் செய்தே
மாபெரிய மனமாற்று மலர்ச்சி காட்டி
மண்ணுலகை விண்ணுலகாய் மாற்ற வேண்டும்
தீபமெனும் அறவழியில் திசை திருப்பித்
திருத்துமுறு முயராற்றைக் காட்டுவாயே.

அன்னமெது மிருதாயர் அணைப்பில் வந்த
அன்புநிறை யுளங்கொண்ட அரங்கநாதா
அன்னையரி னன்புள்ளம் அப்ப னீயும்
அளப்பரிய மறவுளமென் னணியுங்கொண்டே
பன்னரிய நீதிதனைப் பரந்த பூவில்
பற்றலரும் போற்றிடவே பதிமுகுந்தா
என்னரிய வல்லிபுரம் மேவு ஞான
எழிற்பிழம்பே யின்னமுதே யிறைஞ்சினேமே.

வேறு

மாடம தெழுப்பு வோர்கள் மண்குடில் தன்னில் வாழ
ஏடதைக் காணப் பேர்கள் எழில்தரு மாடி வாழ
வீடதே யில்லா தேங்கும் விஞ்சிடு மெண்ணில் பேர்கள்
காடதை நாடல்தானோ கண்ணநின் கருணையம்மா.

வேறு

நெக்குருகி யன்பருளம் நெகிழ்ந்து நேயம்
நிறைவிழிகள் நீர்கவர நினைவு கூர்ந்தே
பக்குவஞ்சேர் பரவசத்தால் பாடி நிற்க
பணிந்துசரா வசரமெலாம் பரவி நிற்க
எக்கணமு மெவ்விடத்தும் இறைஞ்சி நிற்போர்
இடர்களையும் முழுமுதலே இறையே எங்கள்
பக்கமிருந் துறுதுணையாய்ப் பாரித் தோம்பும்
பரந்தாமா நின்னடியைப் பற்றி னோமே.

பார்த்தனுக்குச் சாரதியாய்ப் பரதப் போரில்
பாரதிர நீதிதனைப் படியில் நாட்டி
ஆர்த்தெழுந்த அச்சுதனே அமர ரேறே
அக்கிரமந் தலைதூக்கு மக்கா லத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீர்த்தியுட னவதரித்தே கீழோர் தம்மை
கிழித்தெறிவே னெனப்பகரும் கீதை யென்னும்
சீர்த்திமிகு பனுவல் செய்த செம்மலேயெம்
சிந்தனையி னூற்றுகச் செறிந்து நிற்பாய்.

முடிமன்னர் முனிவர்மூ தறிஞர் நின்றன்
முன்னின்று தாழ்பணிந்து முக்கா லுந்தான்
அடிபரவி யருச்சித்து ஐய நின்றன்
அருளுக்குத் தவமிருக்க அடியே னுந்தான்
கடிதினிலுன் கருணைக்கண் காண வேண்டிக்
காத்திருந்தே இன்றுவரை காண கில்லேன்
வடித்தெடுத்த செந்தமிழே வாரா யென்றன்
வளமறியாக் கவிதைகளை வரவேற் பாயோ

சித்தமிசை நீங்காத சோதியாகச்
சேர்ந்தெம்மை இயக்குமெழிற் சீர்ப்பிழம்பே
நித்தமுயிர் கோடிக்கு நிழலு மீந்தே
நெறிவகுத்துக் காத்தோம்பு நீலவண்ணு
எத்தருணந் தன்னிலுமென் கண்ணு வென்றே
எழுப்புகுரற் கெப்போது மிரங்கு கண்ணே
அத்தனே யருள்பாலித் தாட்கொண் டெங்கள்
அருகிருக்க வேண்டுமென அருச்சித் தோமே.

பணியென்று பகல்வேடத் தினர் பரப்பிப்
பாமரரை ஏமாற்றும் பாவந் தன்னை
அணியென்று சொல்வோரின் ஆணவத்தை
அறிந்துந்தான் துயில்கொள்ளு மரியேயின்று
துணிவுடனே பிறருக்குத் துயரிழைக்கும்
துர்ச்சனரைத் தான்கண்டும் துயில்வ தேனே
பணியான கீதைதரும் மாயோ னேநின்
மலரடியே தஞ்சமென மருவி னேமே.

## கட்டளைக் கலித்துறை

பட்டுமுடித்திநற் பைந்தமிழ் வேய்ங்குழல் பால்வடித்தே
சொட்டுந் துவரிதழ் சேர்த்திசை யாலுளஞ் சொக்க வைப்
போன்
கட்டுள்ளடக்க வியலாத கார்முகில் கண்ணபிரான்
எட்டுத்திசையு மவன்புகழ் பாடி இறைஞ்சுவமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண் சீர்விருத்தம்

விண்ணதிரப் பாரதப்போர் விளைத்த கண்ணு
வீரத்தின் நிலைக்களனே வேந்த ரெல்லாம்
மண்ணகல மாண்டாலும் மன்னு என்றுன்
மலரடிகள் சேவிக்கும் மணிசேர் மார்பா
தண்ணளியோ டேழைகுலம் தாங்கு தாதா
தருமத்தைப் புவிக்குணர்த்துப தாதை நீயே
கண்ணிறையுங் கண்ணுவெம் கருணை யூற்றே
கழிவுகளைக் களையெடுக்கும் கரும வீரா.

நாடுமுய ரின்பமின்றி நலிந்து வாடி
நாதியற்ற நட்டாற்றில் நின்றக் காலும்
பீடுயரும் வளமோங்கிப் பெருமை சேர்ந்தே
பெருநிலையைப் புவிவாழ்விற் பெற்றிட்டாலும்
கேடிலதாய்ப் பிறரின்பம் கெடுக்கா வண்ணம்
கேட்குமரு ளீந்துகெடு மதியை வெய்ய
ஓடதனில் வறுத்துயர்வாம் மதியெனக்கே
உதவிடுநல் லிதயத்துள் ஒளியை ஈவாய்

உன்னருளா லியங்குமென துள்ளந் தன்னில்
உதிக்குமுயர் கருத்தெல்லா முனதே யன்றோ
பன்னரிய கீழ்நிலையாம் பாழ்ங் கிணற்றின்
பாவியெனை மீட்பதுமுன் பார மன்றோ
கன்னலொடு விடங்கலந்தே யுண்ட போதும்
கடிதென்னை யாட்கொள்ளக் காத்திருக்கும்
எண்ணரிய துணையாக எங்கு நின்றும்
எழுவதுநீ யன்றியிவண் எவர்தானந்தோ.

சிந்தனையைத் தெளிவாக்கி சிக்கல் நீக்கிச்
சீரான வாழ்வோங்கிச் சிறக்க நாளும்
அந்தமிலா வருட்கீதை யந்நூல் தன்னை
அளித்திட்ட வாரியனே அவனி யோம்பிச்
சந்ததமும் சத்தியத்தின் சாத்வீ கத்தின்
சாரொளியாய்ச் சங்கமித்த நீலவண்ணு
மந்தமதி தனையோட்டி மனித வாழ்வில்
மாண்புதரு முயர்வாழ்வே மலர வைப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைக் கலித்துறை

சத்திய மோடுநற் சன்மார்க்க மோங்கச் சகமதனில்
கத்தியும் வாளுமே கையால் நழுவிக் கறைபடியும்
நித்தியப் போரது நீங்கியிந் நீணிலம் நிர்மலமாய்
எத்தினத் தின்புறு மத்தினந் தன்னை அருளுகவே.

மாண்புறு நீதியும் மாசறு பண்பும் மதித்தறியா
மூண்டெழு கீழா மசுர குலத்தை முறைப்படியே
பூண்டுடன் சாய்த்திடு போரேதா னின்றுமிப் புல்லியரைக்
கூண்டோ டொழித்துக் குவலய மின்புறக் கோரினமே.

வெண்பா

விண்ணதிர வேழமென விண்ணோர் விளம்புகுறை
கண்ணிமைப்பில் நீக்கியவர் கண்ணிறைந்தாய் - மண்ணவரும்
கண்ணுதிரும் நீர்துடைத்துக் கண்ணளித்துக் காப்பதனல்
கண்ணனெனக் கொண்டார் களித்து.

கொற்றவனே கோபியர்கள் கொஞ்சிமகிழ் கோபாலா
செற்றவரும் சேவித் திறைஞ்சுவனே — பற்றுடனே
ஆள்பவரும் மற்றவரும் அன்புள்ளம் கொண்டவனும்
தாள்பணியுங் கண்ணவேமைத் தாங்கு.

வேறு

உளமெனுங் கோயில் கொண்டே
உரமுறு நீதி யென்னும்
வளமுறு தேர்மீ தேறி
வனப்போடு வீதி சுற்றி
களமுனு வீர மிக்க
காளையர் சிவிகை தாங்க
அளகமு மழகாய்க் கொண்ட
அரிவையர் போற்ற வாராய்.

வேறு

தண்ணொளி வீசிடு தாரோடி ணைந்த தளிர்முகமும்
விண்ணொடு மண்ணவர் வேண்டித் துதித்திடு வீரமிகும்
திண்புய மும்பொலி தேவாதி தேவர் தினமிறைஞ்சும்
கண்ணனென் கார்முகில் வண்ணன் கருணைகனிச்
சுவையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் முழங்கப் பாரதம் வென்றிடு சால்பினனை
பொங்கு மரியெனப் பொல்லாமை தன்னைப் பொசுக்குவனை
அங்கிங் கெனுத படியெங்கணும் நிறை யற்புதனை
பங்க மகலும் படிநிதம் பாடிப் பரவுதுமே.

காய்ந்திடு வெம்பகை காரண மாகக் கடிதினிலே
சாய்ந்திடு கோபுரத்தோடெம துள்ளமும் சஞ்சலத்தின்
மாய்ந்திடு வேளை மருங்கினில் நின்று மணி நிகர்த்த
வேய்ங்குழ லூதிக் கதிதரு மாறனை வேண்டினமே.

நீதிக் குறைவிடம் நீணிலத் துக்கருள் நேர்நிதியம்
பீதிக் கடைக்கலந் தந்திடு பெம்மான் பெருமை தருங்
கீதைக் குயரோசன் என்னும் படிமிகக் கீர்த்தியுற்றுன்
சோதித் திருமக னுங்கண்ண னெங்கள் சுடரொளியே.

எண்சீர் விருத்தம்

இல்லாமை யென்பதனை யில்லா தாக்கி
எல்லோரு மின்புறவே யிருள் மிகுந்த
கல்லாமை தனையொழித்துக் கல்வி யோங்கக்
களிதருநற் கவின்கலைகள் கதித்து மேவப்
பொல்லாமை தனைக்கழுவும் புனித வாரும்
பொதுவுடமை எங்கணுமே பொலிந்து தோன்ற
வல்லானே வல்லிபுரப் பதிவாழ் கண்ணு
வண்ணமிகு முயர்வரத்தை வழங்கு வாயே.

குருவாயூர் தன்னிலொரு குழவியாகக்
குடமுருட்டி நவகீதம் கொண்ட வீசா
அருளீயு மருமைமிகு கண்ணு வெம்மை
அடித் துருட்டிச் செல்லுமிடர் அடக்கு மன்னு
கருமேக வண்ணுநின் கழல்கள் போற்றிக்
கசிந்துருகு மன்பர்பணிக் காவல் வேந்தே
திருவருளே தித்திக்கும் தேனர் பாக்கள்
தேசமெலாம் புகழ்ந்தோம்பு திருவே போற்றி.

ஸ்ரீ நமோ நாராயணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org